9 - JUN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1981 ஏப்ரல் 23.

சித்திரை 11, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேர[illegible]ல் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவ[illegible] க. [illegible]ராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாணை [illegible]

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒரு[illegible]
மாடல்ல மற்றை யவை.

ஒருவருக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியாகும். கல்வி தவிர மற்ற பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விடுதிகளில் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லை. அங்கும் வறட்சியாக இருக்கிறதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்பாராத வகையில் மின்சாரத் தடை ஏற்பட்டதன் காரணமாக சட்டமன்ற புது விடுதியில் தண்ணீர் வருவதில் தடை ஏற்பட்டதாக அறிகிறேன். தற்போது அது சரி செய்யப்பட்டு விட்டது. தண்ணீர் வரத் தொடங்கி விட்டது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

சிதம்பரம் அருள்மிகு நடராஜர் ஆலயத் திருப்பணி.

*வினா எண். 772—திரு. எல். இளையபெருமாள : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் ஆலயத்திற்கு 1979-80 ஆண்டில் கோவில் திருப்பணி வேலைக்காக அரசு மூலமாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) தனியார் மூலம் நன்கொடையாக எவ்வளவு தொகை கிடைத்தது ?

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) சிதம்பரம் அருள்மிகு நடராஜர் ஆலயத்திற்கு 1979-80 ஆம் ஆண்டில் கோவில் திருப்பணி வேலைக்காக அரசு மூலமாக ரூ. 3,00,000 ஒதுக்கப்பட்டது. தனியார் மூலம் ரூ. 1,56,776.62 நன்கொடை கிடைத்தது.

பெருந்துறையிலுள்ள அப்பச்சிமார் மடம் கோவில்.

*வினா எண் 77—திரு தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை அப்பச்சிமார் மடம் கோவிலை அரசு அறநிலையக் கட்டளையின் கீழ் கொண்டு வரும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் இந்த அற நிலையத்தை இலாக்கா ஆளுகையின்கீழ் கொண்டு வருவதற்காக சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

திரு. கு மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த அப்பச்சிமார் மடம் சம்பந்தப்பட்ட இந்த கோவில், மடத்திற்குச் சொந்தமான கோவில். இந்தக் கோவிலுக்கு ஏராளமான வருமானம் வருகிறது. அறநிலையத் துறையின் கீழ் எடுத்துக் கொள்வதற்கு என்ன தடை உள்ளது ? அதை சீக்கிரமாக அமைச்சர் அவர்கள் செய்வாரா ?

அந்த கோவிலுடைய வருமானம் சரியான முறையில் செலவு செய்யப்படாமல் மக்கள் மத்தியிலே அதிருப்தி ஏற்பட்டு ஏராளமான புகார்கள் வந்து கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? மக்கள் விருப்பத்திற்கு ஏற்ப வருமானத்தைச் செலவு செய்யும் வகையில் இந்தக்கோவிலை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அப்பச்சிமார் மடத்தோடு இணைந்திருக்கிற கோவில் இது என்பதற்குச் சரியான விவரங்கள் இல்லாத காரணத்தால் கோயம்புத்தூர் துணை ஆணையர் முன்னால் இது எழுப்பப்பட்டு 19—7—1978 அன்று அவர் இது ஒரு பொது ஆலயம் அல்ல என்று தீர்ப்பு வழங்கி இருக்கிறார். அதற்கு பிறகு நம்முடைய அரசுக்கு அதுபற்றிய சில புகார்கள் வந்தன. அந்தப் புகாரை எழுதியவரே தன்னுடைய பெயரை தயவு செய்து வெளியிலே சொல்லி விடாதீர்கள்., சொன்னால்